# தொனிப் பொருள்
# “இலஞ்சமும் ஊழலுமற்ற வளமான இலங்கை”

தொகையறா :

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவவானினும் நனி சிறந்தனவே
கற்றவரும் அறிவு பெற்றவரும் இதனை
உற்றறியாமல் உள்ளம் மறந்தனவே

பல்லவி :

வேலியே அன்று பயிரினைத் தின்று
வேதனை தந்தது தேசமெங்கும் —அந்தப்
போலியின் தோலினை உரித்ததின்று
பொதுமக்கள் தீட்டியஅரசாங்கம்

அனுபல்லவி :

நாட்டிலே நடக்குது நல்லாட்சி—பொது
நலத்துடன் விடுவோம் உயிர் மூச்சி
கூட்டிலே ஆவி உள்ளவரை—நல்ல
குணத்தோடு தேடு நல்லவரை

சரணம் -1

ஊழலில் மூன்றுமுகங்கள் உண்டு—அதில்
ஊதியம் தாண்டிய பணம் ஒன்று
உறுஞ்சிக் குடிக்கும் பொருள் இரண்டு
உடலின் தானம் என மூன்று
ஏழைகள் ஆயினும் எளியவராயினும் —தினம்
‘ஏசியில்’ வாழும் முதலைகள் ஆயினும்
எடுப்பதும் கொடுப்பதும் பெரும் பாவம்
எண்ணத்தில் வேண்டாம் அகம் பாவம்
(நாட்டிலே நடக்குது நல்லாட்சி .....

சரணம் -2

பெற்றிடல் இலஞ்சம் குற்றம் என்று—பணிப்
பேர்ப்பலகையதில் குறித்திருக்கும்
முற்றத்தில் வாசகம் பொறித்திருந்தும் —சிலர்
மூளைக்குஅதுவோ தெரிவதில்லை
பட்டங்கள் முடித்தும் சட்டங்கள் படித்தும் —மதிப்
பலவீனம் கொண்ட சிலராலே
நட்டத்தில் நாடும் நரகத்தில் ஆடும் —பொது
நலன் சாய்ந்திடும் முடிவாலே
(நாட்டிலே நடக்குது நல்லாட்சி .....

சரணம் -3

பொருள் எனும் வடிவில் கையூட்டு—சில
போக்கிரிச் சாத்தான் கொடுக்கிறது
அருள் எனும் வாசலில் பெரும் பூட்டு—அங்கே
ஆண்டவன் முடிவோ தடுக்கிறது
இருள் மயமாகிடும் நம் நாடு—நமை
ஈன்றதாய் வாழ்வதோ கேட்டோடு
மருள் கொண்ட மனதை நீமாற்று— இலங்கை
மண்ணினில் பொங்கும் தேனூற்று
(நாட்டிலே நடக்குது நல்லாட்சி ......

சரணம் - 4

ஊழலில் மூழ்கிய தேசங்களில் —முதல்
ஊதியே பெருகும் பணவீக்கம்
நாளையதலைமுறை நேசங்களில் —சுடர்
நல்லாட்சி மலர்ந்தே பூப்பூக்கும்
ஆழ மனங்களில் வாழும் குணங்களில் - நிதம்
அகிம்சை நெறியை விதைத்திடுவோம்
ஞாலம் புகழ்ந்திடும் தேசம் ஒன்றை— புது
ஞாயிறென இங்கு படைத்திடுவோம்
(நாட்டிலே நடக்குது நல்லாட்சி .....